Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 27, 2023

புதன்கிழமை செப்டெம்பர் 27, 2023 | ஒளி: 09 கதிர்: 093 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



## நவம்பர் 13 இல் பட்ஜெட் உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையை நவம்பர் 13 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் நிகழ்த்தவுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஒக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2



## மலேசியாவில் முக்கொலை: இலங்கையர் இருவர் கைது

மலேசியாவின் கோலாலம்பூர் - செந்துல் பகுதியில் இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களான இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மலேசிய பொலிஸாரை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செந்துலில் உள்ள இலங்கை தம்பதிகளுக்கு சொந்தமான வீட்டின் இரண்டாவது மாடியில் இலங்கையர்களின் மூன்று சடலங்களும் கோலாலம்பூர் பொலிஸாரால் சனிக்கிழமை (23) கண்டுபிடிக்கப்பட்டன.

உயிரிழந்த மூவரில் ஒருவர் வீட்டினைச் சேர்ந்த தம்பதியினரின் மகன் எனவும், மற்றைய இருவர் வீட்டில் வாடகைக்கு தங்கியிருந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பயங்கரவாதிகளின் புகலிடமே கனடா

### பிரதமர் ட்ரூடோ மீதும் அமைச்சர் அலி சப்ரி சாடல்



கடந்த காலங்களில் இலங்கை தொடர்பாகவும் தற்போது இந்தியா தொடர்பாகவும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த சில கூற்றுக்களை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடுமையாக விமர்சித்துள்ளதுடன், கனடா பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் சீக்கிய தலைவர் கொல்லப்பட்டமை தொடர்பான பிரச்சினைக்கு பதிலளித்த அமைச்சர் சப்ரி, பிரதமர் ட்ரூடோ ஆதாரமற்ற கூற்றுக்களை முன்வைத்ததில் ஆச்சரியமில்லை என்றார்.

பிரதமர் ட்ரூடோ கடந்த காலங்களில் அத்துமீறிய கூற்றுக்களை எந்த ஆதாரத்தையும் வழங்காமல் தெரிவித்ததாக ஏஎன்ஐக்கு வழங்கிய செவ்வியில் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## கற்பிட்டிக்கு ஒரு சட்டம், யாழுக்கு ஒரு சட்டமா?

■ எஸ் தில்லைநாதன்

கற்பிட்டிக்கு ஒரு சட்டம் யாழ்ப்பாணத்திற்க்கு ஒரு சட்டமா என முன்னாள் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உப தலைவரும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க்களின் சமாச முன்னாள் தலைவருமான நா.வர்ணகுலசிங்கம் கேள்வியெழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

இலங்கை துறைமுகங்களில்



## ஷி யான் 6க்கு தரித்து நிற்க அனுமதி இல்லை

சீன ஆராய்ச்சிக் கப்பலான ஷி யான் 6 இலங்கையில் தரித்து நிற்க இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகள் இலங்கைக்கு முக்கியமானவை என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தியாக தீபத்தின்...




தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், செவ்வாய்க்கிழமை (26) கொட்டும் மழைக்கும் மத்தியில் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றி முன்னெடுக்கப்பட்டன.

குடு சலிந்து, ஹரக் கட்டா தங்கிய அறையின்

## மலசலகூடத்திலிருந்து மாத்திரைகள் மீட்பு

ஒருங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவை சேர்ந்த சந்தேகநபர்களான குடு சலிந்து மற்றும் ஹரக் கட்டா ஆகியோர் தங்க வைக்கப்பட்டிருந்த அறைக்கு அருகிலுள்ள மலசலகூடத்திலிருந்து வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## திலீபனின் உருவப்படத்தை பச்சைக்குத்தி நினைவேந்தினார்



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு ஆரம்பகால மற்றும் முக்கிய உறுப்பினராகவும் இருந்த திலீபன் என்றழைக்கப்படும் பார்த்திபன் இராசையா இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அறப் போராட்டத்தின் வழியில் நீரும் அருந்தா உண்ணாவிரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத சமயத்திலும், உறுதியுடன் அந்த உண்ணாவிரதத்தில் உயிர்துறந்தவர்.

தொடர்ச்சி P2

## வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல் இடைநிறுத்தம்

மேல், கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் செயல்முறை செப்டெம்பர் 27ஆம் திகதி புதன்கிழமை முதல் ஒக்டோபர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## தனுஷ்கோடிக்கு வந்தனர்





இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு அகதிகளாக 2 முதியவர்கள் வந்தனர். இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் 2022 மார்ச் மாதத்தில் இருந்து ஒன்றரை ஆண்டில் 271 பேர் தமிழகத்துக்கு அகதிகளாக வந்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கை மன்னார் மாவட்டம் தலைமன்னாரைச் சேர்ந்த நேசப்பெருமாள்(62),

தொடர்ச்சி P2

## மைத்திரி மீதான தடை உத்தரவு இடைநிறுத்தம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை உத்தரவை இடைநிறுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான, செவ்வாய்க்கிழமை (26) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## ஆயுதம், தங்கம் தேடி முல்லையில் அகழ்வு

■ சண்முகம் தவசீலன்



விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் தங்க நகைகள் இருப்பதாக தெரிவித்து முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் திங்கட்கிழமை (25) காலை ஆரம்பிக்கப்பட்ட அகழ்வு பணி 2 ஆவது நாளாகவும் செவ்வாய்க்கிழமை (26) முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் தங்க நகைகள் இருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதியை பெற்று திங்கள் பிற்பகல் பொலிஸாரால் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த அகழ்வு பணியில் எந்தவொரு ஆயுதங்களோ, நகைகளோ மீட்கப்படாத நிலையில் மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட்டிருந்த பணி,

தொடர்ச்சி P2

வறியோரை பாதுகாப்பதற்கான

## இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவு

வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதுகாப்பதற்கான இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பரிஸ் ஏச் ஹடாட்செவோஸ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தை

# எதிர்க்கட்சிகள் சாடினாலும் நாட்டுக்கு நன்மையே ஏற்படும்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அமெரிக்க விஜயம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகிற போதும் , இந்த விஜயத்தினால் நாட்டுக்கு பல நன்மை ஏற்படும் என காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஏனைய உலக வல்லரசுகளுக்கு இடையிலான நட்புறவு மேலும் வலுவடைந்துள்ளதாகவும் ருவன் விஜயவர்தன சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (25) நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்றதன் பின்னர், அங்கு வெற்றிகரமாக இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நாட்டுக்கு பல சாதகமான முடிவுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் மின்சார உற்பத்தியில் 70% புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் ஊடாகப் பெறுவதற்கும் , வனப் பரப்பை 32% ஆக அதிகரிக்கவும், பசுமை வாயு வெளியேற்றத்தை 14.5% குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மலேசியாவில் முக்கொலை: இலங்கையர் இருவர் கைது

கொல்லப்பட்ட மூன்று இலங்கையர்களும் ஆண்கள் என்பதுடன், அவர்களது கை, கால்கள் கட்டப்பட்டு தலை பிளாஸ்டிக் பைகளால் மூடிய நிலையில் காணப்பட்டதாக கோலாலம்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையை சேர்ந்த தம்பதியினரால் ஆறு மாதங்களுக்கு முன்னர் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த வீடொன்றில் இந்தக் கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொலையாளிகள் இருவரும் தம்பதியினருக்கு நன்கு தெரிந்தவர்கள் என்பதுடன், கொலை இடம்பெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் குறித்த வீட்டில் அவர்கள் தங்கியிருந்துள்ளனர்.

## மலசலகூடத்திலிருந்து மாத்திரைகள் மீட்பு

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மலசலகூடத்துக்குள் இருந்தே வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் மேலதிக பரி சோதனைகளுக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று சந்தர்ப்பங்களில் இவ்வாறான வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச்சென்ற கான்ஸ்டபிள் தங்கியிருந்த காவலரணில் போதைப்பொருளுக்கு நிகரான வலி நிவாரணி மாத்திரைகள் கண்டுபிடிக்க ப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தகவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் குழுவுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் தேநீருடன் குறித்த மருந்துகள் கலந்து வழங்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதாகவும் குறித்த கானஸ்டபிள் தலைமறைவாகியுள்ளாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல் இடைநிறுத்தம்

குறித்த மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கணனி முறைமை மேம்படுத்தல் காரணமாக வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக மாகாண பிரதம செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகன உரிமையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டு செப்டம்பர் 26ஆம் திகதியுடன் காலாவதியாகும் வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை ஒக்டோபர் 10ஆம் திகதி வரை காலதாமதமாக அபராதம் செலுத்தாமல் புதுப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதிக்குள் காலாவதியாகும் வாகன அனுமதிப்பத்திரங்களுக்கு அபராதம் விதிக்கப்படாது என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், wmotortraffic.pw.gov.lk என்ற மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வாகன வருமான அனுமதிப்பத்திரங்களை ஒன்லைனில் வழங்குவது செப்டம்பர் 24 நள்ளிரவு முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## புத்தலயில் பூமி அதிர்ச்சி

புத்தல பிரதேசத்தில் 2.4 ரிக்டர் அளவிலான சிறிய பூமி அதிர்ச்சி பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்தது.

திங்கட்கிழமை (25) இரவு 11:20 மணியளவில் இந்த சிறு நடுக்கம் பதிவாகியதாகவும் மஹகனதராவ, ஹக்மன, பல்லேகல மற்றும் புத்தங்கல ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள பூமி அதிர்வு மானிகளில் மேற்பரப்பிற்கு அடியில் ஒரு கிலோமீற்றர் ஆழத்தில் பூமியதிர்ச்சி பதிவாகியுள்ளது.

இருந்த போதிலும், இந்த சிறிய நிலநடுக்கத்தால் சேதம் ஏற்பட்டதாக இதுவரை எந்த தகவலும் வரவில்லை என்று பணியகம் குறிப்பிட்டது.

# பயங்கரவாதிகளின் புகலிடமே கனடா

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக பெரும் பொய்யை சொன்னார் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது அனைவருக்கும் தெரியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத்தால் இலங்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சில பயங்கரவாதிகள் கனடாவில் பாதுகாப்பான புகலிடத்தை கண்டுபிடித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் பயங்கரவாதிகள் தொடர்பில் பிரதமர் ட்ரூடோ விடுத்துள்ள பல கூற்றுக்களை இலங்கை திட்டவட்டமாக நிராகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

கனடாவில் சீக்கியத் தலைவர் கொல்லப்பட்டதில் இந்தியாவுக்குத் தொடர்பு இருப்பதாக கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியமை, இரு நாடுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க விரிசலைத் தூண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கனேடியர்களுக்கான விசா சேவைகளை கூட இந்திய அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தனுஷ்கோடிக்கு வந்தனர்

கம்பஹா மாவட்டம் மல்வானையை சேர்ந்த ராவியத்துல் அதவியா (64) ஆகிய 2 பேரும் இலங்கையில் உள்ள மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையிலிருந்து பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரை பகுதிக்கு, திங்கட்கிழமை(25) அதிகாலை வந்திறங்கி உள்ளனர்.

தகவல் அறிந்த மெரைன் பொலிஸார் அவர்களை அழைத்து சென்று விசாரணை நடத்தினர். பின்னர் மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அவர்கள் இருவரையும் ஒப்படைத்தனர். இவர்களுடன் சேர்த்து தமிழகம் வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 273 ஆக உயர்ந்துள்ளது.

## ஷி யான் 6 க்கு தரித்து நிற்க...

ஷி யான் 6 என்ற சீன ஆராய்ச்சிக் கப்பல் ஒக்டோபர் மாதம் இலங்கைக்குக்கு வருகின்றமை மற்றும் இந்தியாவின் கரிசனைகள் தொடர்பாகவும் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் சப்ரி மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்துள்ளார் என்று ஏஎன்ஐ ஊடக செவ்வியை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் செவ்வாய்க்கிழமை (26) செய்தி வெளியிட்டன.

இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் இணக்கப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட, நிலையான செயற்பாட்டு நடைமுறைகளுக்கு அமைவாக, கடல்சார் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைக்கு எவ்வித சிக்கலும் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலையான செயற்பாட்டு நடைமுறையுடன் இணங்கும் வரை, எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றும் இணங்கவில்லை என்றால், எங்களுக்கு ஒரு சிக்கல் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

தனக்கு தெரிந்தவரை, ஒக்டோபர் மாதத்தில் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு தாங்கள் அனுமதி வழங்கவில்லை என்றும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்றும் குறிப்பிட்டதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு கப்பல்களுக்காக நிலையான இயக்க முறையை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சீன ஆராய்ச்சிக் கப்பல் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைத்திரிக்கு மீதான தடை உத்தரவு இடைநிறுத்தம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் அனுப்பப்பட்ட விளக்கக் கடிதத்தை செயற்படுத்துவதைத் தடுக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த முறைப்பாட்டை பரிசீலித்ததன் அடிப்படையில் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி வரை தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கில் உண்மைகளை மறைத்து இந்த உத்தரவு பெறப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் ஊடாக நீதிமன்றத்தில் அறிவித்ததுடன், உத்தரவை இடைநிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தார்.

உண்மைகளை கருத்திற்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளுக்கு பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை இடை நிறுத்த தீர்மானித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்கத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் தனக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என்று தயாசிறி ஜயசேகர நீதிமன்றில் தாக்கல் செய்த முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் கடந்த 18ஆம் திகதி கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் மன்னிப்பு வழங்குமாறு கோரி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டதாக தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் யாப்பின் பிரகாரம் அவ்வாறான சாக்குப்போக்குகளைக் கோரி கடிதம் அனுப்ப கட்சியின் தலைவருக்கு அதிகாரம் இல்லை எனவும் குறித்த கடிதம் சட்டவிரோதமானது என தீர்ப்பளிக்குமாறு கோரி தயாசிறி குறித்த முறைப்பாட்டை சமர்ப்பித்திருந்தார்.

## நவம்பர் 13 இல் பட்ஜெட் உரை

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலும் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 24 ஆம் திகதி மாலை நடைபெறும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

2024 வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் அதன் பின்னர் தொடங்கி நவம்பர் 25 முதல் டிசெம்பர் 13 வரை நடைபெறவுள்ளதுடன், மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 13 அன்று நடைபெறவுள்ளது.

வரவு செலவுத் திட்டத்திற்கு அனுமதி கிடைத்தவுடன், டிசெம்பர் 27 ஆம் திகதிக்குள் சபாநாயகரின் சான்றிதழுடன் அதை சட்டமாக்க அரசாங்கம் நம்புகிறது.

அதன்படி, டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர், புதிதாக அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்படி அரச செலவினங்களுக்கான அனைத்து ஒதுக்கீடுகளும் செய்யப்படும் என்றார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பான செலவினங்களுக்கு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த அவர், இந்த ஆண்டு 65 பில்லியனாக உயர்ந்த நலன்புரி செலவினங்கள், எதிர்வரும் வரவிருக்கும் பட்ஜெட்டில் 185 பில்லியன் ரூபாயாகும் என்றும் தெரிவித்தார்.

## கற்பிட்டிக்கு ஒரு சட்டம், யாழுக்கு ஒரு சட்டமா?

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் செவ்வாய்க்கிழமை (26) இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டதுடன், மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியில் கடற்றொழில் நீரியல் வளத்துறையினரால் கூட்டம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டு அந்தக் கூட்டத்திற்கு கொழும்பிலிருந்து நீரியல் வளத்துறை அதிகாரிகள் வருகைதந்திருக்கிறார்கள்.

இங்கே உள்ள சங்கங்களுக்கு அறிவித்ததாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பல முக்கியமான கடற்றொழில் அமைப்புகளுக்கு அறிவிக்கவில்லை. ஒரு கட்சி சார்ந்த ஆட்களுக்கு அறிவிக்கப்பட்டே அந்தக் கூட்டமானது இடம் பெற்றிருக்கிறது.

அதில் அதிகாரி ஒருவர் உரையாற்றி இதுதான் இப்ப கொண்டுவரவிருக்கிற சட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதில் இருந்த பச்சோந்தியொருவர் இந்த சட்டம் சரி என்று சொல்லியபோது, நெடுந்தீவில் இருந்து வந்த சமாச பிரதிநிதியும் இன்றும் ஒருவரும் குறித்த சட்டம் தொடர்பில் எதிர்த்திருக்கிறார்கள்.

ஏன் இந்த சட்ட புத்தகத்தில் நடுப்பகுதியில் வெள்ளை பேப்பராக இருக்கிறது, ஏன் இடை வெளி விடப்பட்டிருக்கிறது, என்ன காரணம் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இது அச்சு பதிப்பில் ஏற்பட்ட தவறு என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார். இது இவ்வாறு கூறக்கூடிய கதையா ? , ஹோட்டலில் கூட்டம் நடத்துவதற்கு இவ்வளவு காசு, போக்குவரத்து செலவு, சாப்பாட்டு செலவு, கொழும்பிலிருந்து இங்கு வந்து இவ்வாறு கூறுவது சரியா?

அச்சு பதிப்பு சரியாக பதியவில்லை என்று கூறி ஒரு வதந்தியை பரப்பி இருக்கிறார்கள். அதில் மீண்டும் ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது ஒன்றரை மாதத்திற்கு பின்னால் திருப்பி பதிப்பு செய்யப்பட்டு கூட்டம் ஒன்று நடாத்தி முடிவு எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மீண்டும் தயவுசெய்து ஒவ்வொரு சங்கத் தலைவரும் விசேட கவனம் எடுங்கள். நாங்களும் அந்த புத்தகத்தை வாங்குவதற்காக தேடிக் கொண்டிருக்கிறோம். அது எங்களுக்கு கிடைக்கும். அந்த புத்தகம் கிடைத்தவுடன் நாங்கள் ஊடகத்தில் அதை காண்பிப்போம். இந்தச் சட்டம் இலங்கை முழுவதற்குமானது.

ஏன் என்று சொன்னால் வட மாகாணத்தில் மீனவர்கள் ஏற்றும் கொள்ளப்பட்ட சட்டம் என்று காண்பித்து சட்டமாக கொண்டுவரப்படவிருக்கிறது.

உள்ளூர் இழுவை மடி தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு இப்போது கற்பிட்டியில் உள்ளூர் இழுவை மடி படகுகள் தொழிலில் ஈடுபடுவதில்லை. ஆனால் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் இழுவை மடி படகுகள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்று கற்பிட்டிக்கு ஒரு சட்டம் யாழ்ப்பாணத்துக்கு இன்னொரு சட்டமா?” என்றார்.

# ஆயுதம், தங்கம் தேடி முல்லையில் அகழ்வு

மீண்டும் செவ்வாய்க்கிழமை (26) காலை 9 மணியளவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டுள்ள போதும் நிலத்திற்குள் இருந்து தகரங்களும், ஒலிநாடா ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது. மேலும் நிலத்தினை தோண்ட தோண்ட நீர்வர தொடங்கியுள்ளதால் நீரை வெளியேற்றும் பணியானது நடைபெற்றது. இதுவரை புதைக்கப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் பிரசன்னத்துடன் குறித்த அகழ்வு பணி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவு

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் பல விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா மற்றும் உலக வங்கி அதிகாரிகளுடன் நியூயோர்க்கில் உள்ள உலக வங்கி தலைமையகத்தில் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது, உலக வங்கியின் தலைவர் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும் ஆதரவளிப்பதாக உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சிகள் சாடினாலும் நாட்டுக்கு நன்மையே ஏற்படும்

2040 இல் நிலக்கரிப் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைத்து, 2050 இல் காபன் நிகர பூஜ்ஜியத்தை அடைய எதிர்பார்த்துள்ளதாகவும், நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் கூட்டத்தொடரில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிற்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் உள்ள ஐ. நா சபையின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் நிதித்துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்திற்கு பொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார் ” என்றும் ருவன் விஜேவர்தன மேலும் தெரிவித்தார்.

## திலீபனின் உருவப்படத்தை பச்சைக்குத்தி நினைவேந்தினார்

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் மரணம் எய்தினார்.

அவரது நினைவேந்தல் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிலையில், ஒருவர், தியாக தீபம் திலீபனின் உருவப்படத்தை தனது கையில் பச்சைக்குத்தியுள்ளார்.

# புதிய வரி சட்டத்தை மீள் பரிசீலனை செய்க

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களின் விதிக்கப்பட்டுள்ள புதிய வரி சட்டத்தை மீள் பரிசீலனை செய்து சுமுகமான தீர்வை வழங்குமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை (26) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.




பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு இலவச கல்வி நோக்கம் எதிர்காலத்தில் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

இந்த போராட்டம் நாங்கள் நாட்டிற்கு வரி செலுத்தமாட்டோம் என்பதல்ல. ஆனால் எங்களது தகுதிக்கு மேலான வரி அறவீட்டை மறுதிளித்து கொண்டிருக்கின்றோம். எனவே பொருத்தமான வரியை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். திடீரென இவ் வரி விதிப்பானது எங்களது வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை எதிர்கொண்டுள்ளது.

ஒரு பொருத்தமான ஏற்றுக் கொள்ள தக்கதான ஒரு வரியை எங்களுக்கு அறிமுகப்படுத்தி எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்வதாக தெரிவித்தார்.

## சாரதியை கடத்திய கும்பல் சிக்கியது

■ நவி



இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த நபரை கம்பளை ஜயமாலாபுர பிரதேசத்தில் வைத்து வாளால் தாக்கி கடத்திச் சென்ற பெண்ணொருவர் உட்பட ஐவர், கொழும்பில் வைத்து வேனுடன் கைது செய்யப்பட்டனர் என தெரிவித்த கம்பளை பொலிஸார், அவர்களிடமிருந்து பழங்கால வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொத்மலை மாவெலயில் இருந்து கண்டிக்கு கடந்த 24ம் திகதி பயணித்துக்கொண்டிருந்த பேருந்தில் வைத்து, சாரதியை தாக்கி கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலின் பிரகாரம் கம்பளை பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, கொழும்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட வாளுக்கு புராதன மதிப்பு உள்ளதா என தொல்பொருள் திணைக்களத்திடம் கேட்டறியப்படும் எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்கள் கம்பளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பெண்ணை கடத்தி கப்பம் பெற முயன்ற இருவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்

பெண்ணொருவரை கடத்திச் சென்று கப்பம் பெறுவதற்கு முயற்சித்த சம்பவம் தொடர்பில் இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுனேரிய - லான்சிகம பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 24ஆம் திகதி இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவர், தனது மனைவியை சிலர் கடத்திச் சென்றுள்ளதாகவும், அவரை விடுவிக்க பணம் வழங்க வேண்டும் என கடத்தல்காரர்கள் தன்னிடம் கூறியதாகவும் மாரவில பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட மாரவில பொலிஸார், கொச்சிக்கடை - தலுவாகொடுவ பகுதியில் உள்ள வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடத்தப்பட்டதாக கூறப்படும் பெண்ணை மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்தனர். அத்துடன் அவர்களிடமிருந்து துப்பாக்கியொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் அப்பெண், இத்தாலியில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 08 பேரிடம் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் பணம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அந்த பெண் கடத்தப்பட்டமைக்கு இதுவே காரணமாக இருக்கலாம் என சந்தேகப்படுவதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் திங்கட்கிழமை (25) மாரவில நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், சம்பவம் தொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திலீபனுக்கும் ராஜனுக்கும் தடை

■ வி.ரி.சகாதேவராஜா



உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாக தீபம்திலீபனுக்கு கல்முனையில் நினைவேந்தல் நடாத்துவதற்கும் உண்ணாவிரதமிருந்த ராஜனுக்கு, கல்முனை நீதிவான் நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

த.தே.கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் கல்முனையில் உண்ணாவிரதம் இருந்த உண்ணாவிரதியுமான சந்திரசேகரம் ராஜனுக்கு இந்த தடை உத்தரவை இரண்டு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று கல்முனை நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் இருந்தும், பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்திலிருந்தும் இந்த தடைஉத்தரவு கோரி நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

இந்த தடை உத்தரவை, பொலிஸார் திங்கட்கிழமை (25) அவரிடம் கையளித்தனர்.

## இளைஞனின் சடலம் மீட்பு

■ மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி கோணாவில், ஊற்றுப்புலம் கிராமத்தின் நாற்சந்தியில் இளைஞனின் சடலமொன்று, திங்கட்கிழமை (25) இரவு 9 மணியளவில் கிடப்பதை கண்ட பொதுமக்கள், அதுதொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தைச்சேர்ந்த முப்பது வயது மதிக்கத்தக்க புஸ்பராசா தினேஸ்கரன் என்பவரென அடையாளம் காணப்பட்டுள்ளது.

## கம்பளையில் கழிவுத் தேயிலைத் தூள் சிக்கியது

■ நவி



கம்பளை எத்கால பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திங்கட்கிழமை (25) இரவு வீதிசோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த லொறியை சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அதில் கழிவுத் தேயிலை இருப்பது கண்டறியப்பட்டது.

லொறி கைப்பற்றப்பட்டதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார் என எத்கால பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை எத்கால பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கம்பளை தேயிலை சபை உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டதுடன், லொறியில் 10,000 கிலோகிராம் கழிவு தேயிலை இருந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் எத்கால பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கம்பளை தேயிலை சபை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, உலப்பனை கைத்தொழில் பிரிவு பகுதியில் கழிவு தேயிலை குவிக்கப்பட்ட இடமொன்றையும் சுற்றிவளைத்து சோதனைக்கு உட்படுத்தினர்.

## யூரி தோட்டத்தில் தீ: 33 பேர் நிர்க்கதி

■ ஆறுமுகம் புலியரசன்

பதுளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டு யூரி தோட்ட ,மாப்பகல பிரிவில் உள்ள 5ஆம் இலக்க தொடர் லயன் குடியிருப்பில் ஒன்பது வீடுகள் திங்கட்கிழமை (25) இரவு தீயில் கருகின்றன.

வீடொன்றில் ஏற்பட்ட மின்னொழுக்கின் காரணமாகவே அந்த லயத்தின் சகல குடியிருப்புகளுக்கும் தீ பரவியுள்ளது.

இதனால், அந்த லயன் குடியிருப்பில் வசித்த 9 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் வீடு மற்றும் உடமைகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளனர்.
























## கொட்டும் மழைக்கு மத்தியில் தியாக தீபத்தின் நினைவேந்தல்

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (26) கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும் , நாட்டு பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனை தொடர்ந்து தியாக தீபத்தின் உருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்திலும் , நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவண கண்காட்சி கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன் இரண்டு தூக்கு காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததுடன் , யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு 06க்கும் மேற்பட்ட ஊர்தி பவனிகள் வந்திருந்தன.

நினைவு சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பெய்ய ஆரம்பித்த போதிலும் , மழையையும் பொருட்படுத்தாது , நினைவிடத்தில் கூடி இருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர். மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும்ய யாழ். பல்கலைக்கழகத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார். அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களில் அதாவது செப்டெம்பர் 26 ஆம் திகதி அவரது உயிர் பிரிந்தது.

வடக்கு, கிழக்கு தமிழ்மிரர் நிருபர்கள்

# மாணவர்களின் பொன்னான காலத்தை மண்ணாக்காதீர்

கொரோனா தொற்றுக்குப் பின்னர், ஒவ்வொரு செயற்பாடுகளும் ஒரு சில மாதங்கள் காலதாமதித்தே முன்னெடுக்கப்படுகின்றன. இதில், தேசிய பரீட்சைகள் எப்போது நடக்கும் என்பது தெரியாமலே பாடசாலை மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கின்றனர். பரீட்சைகளை எழுதினாலும் பெறுபேறுகள் வெளியாகும் திகதி உரிய முறையில் குறிக்கப்படுவதில்லை.

பரீட்சைகள் முறையாக நடத்தி முடிக்கப்பட்டாலும், விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடுவோர், விடைத்தாள் மதிப்பிடும் மத்திய நிலையங்களுக்குச் சென்று இரண்டொரு நாட்கள் கழித்து, தங்களுக்கு அதிகரித்த கட்டணங்கள் வேண்டும், முன்கூட்டிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றெல்லாம் கோரிக்கைகளை முன்வைத்து, விடைத்தாள்களை மதிப்பிடாமல் விடுவதும் தாமதத்துக்கு ஒரு காரணியாக அமைந்துவிடுகின்றது.

தேசிய பரீட்சைகளான, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சைக்களுக்கான திகதி எக்காரணங்களைக் கொண்டும் மாற்றப்படாத வகையில், குறிக்கப்படுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தன. எனினும், வருடாவருடம் அந்தத் திகதிகள் மாற்றப்படுகின்றன.

இதற்கிடையே க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் என்பனவற்றின் கல்வி முறைமைகளில் மாற்றங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நடந்து முடிந்த உயர்தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அதுமட்டுமன்றி, மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள், எதிர்காலத்தில் கல்வித்துறையில் மேற்கொள்ளக்கூடிய மாற்றங்கள், முகங்கொடுத்த சவால்கள், உலக தரத்துக்கு ஏற்றவகையில் கல்வித்துறையில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் தொடர்பில், அங்கிருந்த மாணவர்கங்கள் தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்தனர்.

அவர்களின் கருத்துக்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அங்கியிருந்த முக்கியஸ்தர்கள் கேட்டுக்கொண்டனர். அன்று கருத்துரைத்த மாணவர்களின் கருத்துகளில் பெரும்பாலானவை கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது.

சாதாரண தர மற்றும் உயர்தரத்தில் திடீரென மாற்றங்களை கொண்டுவராது தரம், 6,7,8 மற்றும் 9ஆம் தரங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் மாற்றங்கள் செய்தாலும் தேசிய கல்விக் கொள்கையை உருவாக்குவது அவசியமாகும்.

உயர்தர பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அடுத்த உயர்தரப் பரீட்சைக்கான திகதியும் குறிக்கப்பட்டது. எனினும்,போதிய பெறுபேறுகள் கிடைக்காமையால், மீளவும் பரீட்சைக்குத் தோற்றவிருப்போருக்கு போதியளவில் நேரமில்லை என்றும், அந்தத் திகதியை ஒத்திப்போடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய திகதி குறிக்காமலே பிற்போடப்பட்டுள்ளது.

இதனால், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளது. இதனால், பெற்றோர் கடுமையான பொருளாதார சுமையை தாங்கிக்கொள்ள வேண்டியவர்களாக தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட வயதில் பரீட்சைக்குத் தோற்றி அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செல்லவேண்டியவர்கள், தாமதித்தே பயணிக்கின்றனர். அத்துடன் மாணவர்களின் பொன்னான காலமும் மண்ணாகி போய்க்கொண்டிருக்கின்றது.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களிலும் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோஅல்லதுபொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும் வெற்றிலையை வாயில் சப்பியவாறு, அதை பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள், மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பனமான விடயமாகி விட்டது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# போரில் இறந்தவர்களை நினைவுகூரல் பற்றிய சர்ச்சை



எம்.எஸ். எம். ஐயூப்

யாழ்ப்பானத்தில் புலிகள் அமைப்பின் முன்னாள் அரசியல்துறை தலைவராக இருந்து பின்னர் 12 நாள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி, திலீபன் என்று தமிழர்களால் மிகவும் உயர்வாக மதித்து அழைக்கப்படும் இராசையா பார்திபனை நினைவு கூரும் நிகழ்வொன்றில் மூன்று வருடங்களுக்கு முன்னர் கலந்து கொண்டதற்காக கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வாரம் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்துக்கு குற்றப்பத்திரம் வழங்கி இருக்கிறது.

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த ஒரு நாளில் நடைபெற்ற திலீபன் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டதாகவே சட்ட மா அதிபர் இவ்வழக்கில் சிவாஜிலிங்கத்தை குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

இவ்வருடம் திலீபன் ஞாபகார்த்த நிகழ்வுகளும் அவற்றுக்கு எதிரான நிகழ்வுகளும் இடம்பெற்றுக் கொண்டு இருக்கும் நிலையிலேயே மூன்றாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற திலீபன் நினைவு நிகழ்வொன்றில் கலந்து கொண்டதாக சிவாஜிலிங்கத்திடம் குற்றப் பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்பிலும் வட மாகாணத்திலும் திட்டமிடப்பட்டு இருந்த சில திலீபன் ஞாபகார்த்த நிகழ்வுகள் தொடர்பாக பொலிஸார் சமர்ப்பித்த மனுக்கள் விடயத்தில் வடக்கிலும் கொழும்பிலும் நீதிமன்றங்கள் வேறுபட்ட தீர்ப்புக்களை வழங்கி இருக்கின்றன. அந்நிகழ்வுகளை தடைசெய்யுமாறு பொலிஸார் கொழும்பு கோட்டை, மாளிகாகந்த, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் மனுக்களை சமர்ப்பித்திருந்தனர். வடக்கில் நீதிமன்றங்கள் அவ்வாறான தடை உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது என்று தீர்ப்ளித்துள்ள போதிலும் கொழும்பில் இருக்கும் இரு நீதிமன்றங்களும் பொலிஸாரின் அக்கோரிக்கைகளை ஏற்று அந்நிகழ்வுகளுக்கு எதிராக தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளன.

யாழ்ப்பாண நீதிமன்றம் கடந்த 19 ஆம் திகதி தமது தீர்ப்பை வழங்கி இருந்த நிலையில் கொழும்பிலிருந்து பொலிஸ் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களங்களைச் சேர்ந்த சில அதிகாரிகள் ஹெலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணத்துக்குச் சென்று மீண்டும் புதிதாக மனுக்கள் சமர்ப்பித்து திலீபன் நினைவு நிகழ்வுகளை தடைசெய்யுமாறு கோரிய போதிலும் நீதிமன்றம் தமது முன்னைய தீர்ப்பபை மாற்றிக் கொள்ளவில்லை. தாம் உயர்வாக மதிக்கும் ஒருவரை நினைவு கூர மக்களுக்கு உரிமை இருக்கிறது என்றும் அதனை சாத்வீகமான முறையில் செய்ய அவர்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் நீதவான் கூறியிருக்கிறார்.

வவுனியா நீதிமன்றத்திடமும் பொலிஸாருக்கு இதே தீர்ப்பு தான் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண நீதிமன்றம் கூறியது போலவே ஞாபகார்த்த நிகழ்வுகளின் போது எவரேனும் சட்டத்தை மீறினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அந்நீதிமன்றம் கூறி இருக்கிறது.

ஆனால் கொழும்பு மற்றும் மாளிகாகந்தை நீதிமன்றங்கள் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று கட்டளை பிறப்பித்து இருந்தன. அதன் படி கொழும்பில், சில பெரும்பான்மை இனத்தவர்கள் உள்ளிட்ட சிலரால் ஏற்பாடு செய்யப்பட்ட திலீபன் நினைவு நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டன. நீதிமன்றங்கள் இனவாத கண்ணோட்டத்தில் தீர்ப்புக்கள் வழங்கியதாக நாம் இங்கே கூற வரவில்லை. இந்நிகழ்வுகளால் உரிய பிரதேசத்தில் சமாதானம் பாதிக்கப்படலாம் என்ற அடிப்படையிலேயே பொலிஸார் தமது கோரிக்கையை முன்வைத்து இருந்தனர். இந்த நிலையில் நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் இருக்கும் வெவ்வேறான நிலைமைகளை கருத்திற் கொண்டே நீதிமன்றங்கள் வெவ்வேறு தீர்ப்புக்களை வழங்கியிருக்கலாம். தமிழ் பிரதேசங்களில் திலீபன் ஞாபகாரத்த நிகழ்ச்சிகள் காரணமாக குழப்ப நிலை ஏற்படும் சாத்திக்கூறுகள் இல்லை.

இந்த நீதிமன்ற தீர்ப்புக்கள், ஆயுதப் போராட்டங்களில் உயிரிழப்போரை நினைவு கூரல் தொடர்பாக மீண்டும் ஒரு விவாதத்தை ஆரம்பித்துள்ளது. இது வருடத்துக்கு ஓரிரு முறை தலைதூக்கும் விவாதமாகும். நாட்டில் தமிழீழ விடுதலை புலிகளும் மக்கள் விடுதலை முன்னணியும் ஆயுதப் படைகளின் சார்பாக அரசாங்கமுமே மோதல்களில் இறந்தோரை நினைவுகூருகின்றன. சில சமயங்களில் தமிழீழ விடுதலை இயக்கமும் (டெலோ) புளோட் அமைப்பும் போரில் இறந்த தமது சகாக்களை நினைவுகூருகின்றன. இவற்றில் புலிகள் அமைப்பினர் அல்லது மற்றவர்கள் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூருவதே சர்ச்சைக்குரிதாகியுள்ளது.

அரசாங்கம் மே மாதம் 19 ஆம் திகதி போர் வீரர்களின் நாளாக பிரகடனப்படுத்தி நினைவஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்துகிறது. மக்கள் விடுதலை முன்னணி ஏப்ரல் மாதமும் நவம்பர் மாதமும் அவ்வாறான நிகழ்ச்சிகளை நடத்துகிறது. புளோட்டும் டெலோவும் அவற்றின் தலைவர்களான உமா மகேஸ்வரனினதும் ஸ்ரீ சபாரத்தினத்தினதும் ஞாபகார்த்தமாக நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. புலிகளும் முள்ளிவாய்க்கால் நாள், கரும்புலிகள் நாள், திலீபன் நினைவு நாள் மற்றும் மாவீரர் நாள் ஆகியவற்றை நடத்துகின்றன.

தாம் நடத்தும் நினைவு நாட்களைத் தவிர ஏனையவற்றை கொலைகாரர்களை நினைவு கூருவதாகவே சகலரும் கருதுகின்றனர். அதனாலேயே நினைவாஞ்சலி நிகழ்வுகள் சர்ச்சைக்குரியதாகி விடுகின்றன. சிலர் திலீபன் தொடர்பாகவும் அவ்வாறே கூறுகின்றனர். ஆனால் ஆயுதப் போரில் ஈடுபடும் எவரும் கொலைகளை செய்தவர்கள் தான். ஆயுதப் போர் என்பதே படுகொலை போட்டியொன்றேயொழிய விளையாட்டுப் போட்டியொன்றல்ல. அக்கொலைகள் சிலவேளை மிகக் குரூரமானவையாகும்.

திலீபனும் கூட, 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை தமது உயிரை தியாகம் செய்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடு முன், இராணுவத்தினர் ஒபரேஷன் லிபரேஷன் என்ற பெயரில் 1987 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் வடமராட்சியில் நடத்திய இராணுவ நடவடிக்கைக்கு எதிராக போராடியவராவார். அப்போரின் போதே அவர் தமது வயிற்றில் மிக மோசமான முறையில் காயமடைந்தார்.

அதற்கு முந்திய வருடத்தில் அதாவது 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புலிகளுக்கும் டெலோ அமைப்பினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் மோதல் இடம்பெற்றது. அம் மோதலின் போது திலீபனினதும் கிட்டு என்று அழைக்கப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமாரினதும் தலைமையில் புலிகள் டெலொவின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் உள்ளிட்ட சுமார் 400 டெலோ உறுப்பினர்களை கொன்றனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சரணடைந்த பின்னரே கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

போரின் போது மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பது உண்மை தான். ஆனால் நடைமுறையில் நடைபெறுவது அதுவல்ல. இது எங்கும் காணப்படும் நிலைமையாகும். அரசியலுக்கு வருமுன் உலகில் மிகச் சிறந்த இராணுவத் தளபதியாக வர்ணிக்கப்பட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு எதிராகவும் மிக மோசமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவற்றை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இராணுவ முகாம்களில் சித்திரவதைகளைப் பற்றி ரோஹித்த முணசிங்ஹ என்பவர் ஒரு புத்தகத்தையே எழுதியிருக்கிறார்.

இன்று ஏனைய நாடுகளுக்கு மனித உரிமைகளைப் பற்றி வகுப்பு எடுக்கும் அமெரிக்காவின் படைகள் ஏனைய நாடுகளில் நடந்து கொள்ளும் முறை இதற்கு சிறந்த உதாரணமாகும். அந்நாட்டில் Waterboarding எனப்படும் மூச்சுத்திணறச் செய்யும் சித்திரவதை முறை நடைமுறையில் இருப்பது பொதுவாக அறியப்பட்ட விடயமாகும். 1993 ஆம் ஆண்டு கல்ப் போரின் போது அமெரிக்கப் படைகள் 9000 ஈராக்கிய படை வீரர்களை அவர்களது யுத்த அகழிகளிலேயே விசேடமாக தயாரிக்கப்பட்ட புல்டோஸர்கள் மூலம் மண்ணைப் போட்டு உயிரோடு புதைத்தனர்.

போர்கள் உள்ளிட்ட ஆயுத மோதல்களில் ஈடுபடுவோர் எவ்வளவு தான் குரூரமாக நடந்து கொண்டாலும் அவர்களுக்கு எதிரானவர்கள் இருப்பது போலவே ஆதரவானவர்களும் இருக்கவே தான் செய்கிறார்கள். அதேவேளை அவ்வாறு போரில் ஈடுபடுவோர் தமது நாட்டுக்காக அல்லது தாம் நேசிக்கும் ஒரு இனத்துக்காக பெரும் தியாகங்களையும் செய்கிறார்கள். எனவே அவர்கள் பிரதிநித்துவப்படுத்தும் மக்கள் அவர்களை நினைவு கூருவதை நியாயமற்றதாகவோ பிழையானதாகவோ கூற முடியாது. எனினும் எல்லோரும் மற்றவர்களால் நினைவுகூரப்படுவோர் கொடூரமானவர்கள் என்றும் அவர்களை நினைவுகூரக் கூடாது என்றும் நினைக்கின்றனர்.

ஒரே நோக்கத்துக்காக போர் புரிந்து உயிர்த் தியாகம் செய்தாலும் மற்றொரு அமைப்பில் இருந்தால் அவரது தியாகத்தை மதிக்கவோ அவரை நினைவு கூரவோ பலர் முன்வருவதில்லை. இது வடக்கிலும் தெற்கிலும் காணப்படும் நிலைமையாகும். அதேபோல் அரசியல் குறிக்கோள்கள் வேறுபட்டாலும் ஆயுத மோதலில் ஈடுபட்ட பலர் மக்களுக்கு விடிவு வேண்டும் என்ற உன்னதமானதோர் நோக்கத்துக்காகவே உயிர் நீத்தார்கள் என்று சிந்திக்கவும் எவரும் தயாராக இல்லை.

மக்களை மனதில் வைத்து ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்வோரை நினைவுகூரும் விடயத்தில் எழும் மற்றொரு பிரச்சினை என்னவென்றால் அதன் மூலம் தற்போதைய இளந்தலைமுறையினர் வன்முறை அரசியலுக்கு தள்ளப்படுகிறார்களா என்பதேயாகும். ஏனைனில் இவ்வாறான ஞாபகார்த்த நகழ்ச்சிகளின் போது உயிர் நீத்தவர்களின் தியாகங்கள் மட்டுமன்றி அவர்களது சகல செயற்பாடுகளும் நியாயப்படுத்தப்படுகின்றன. போற்றப்படுகின்றன, அவ்வாறான தியாகங்களின் பால் தற்போதைய இளைஞர்கள் யுவதிகள் ஈர்க்கப்படுகின்றனர்.

இவ்வனைத்தையும் கருத்திற் கொண்டு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) தமது அறிக்கையின் இறுதி பந்தியில், நாட்டில் சகலரும் ஆயுதப் போராட்டங்களில் உயிர் நீத்த சகலரையும் அவர்களது இனத்தையோ போராட்ட குறிக்கோள்களையோ கருத்திற் கொள்ளாது பொதுவாக நினைவுகூரும் நிகழ்வொன்றை தேசிய ரீதியில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால் அவ்வாறு சிந்திக்க இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளிலாவது இலங்கை மக்களிடையே மனப்பக்குவம் ஏற்படுமா என்பது சந்தேகமே.

## கடிதங்கள்

### தேங்கி நிற்கும் கழிவு நீரால் மக்கள் அவதி

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பெரியநீலாவணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத்திட்டத்தில் தேங்கி நிற்கும் கழிவு நீரினால் பாரிய சுகாதார சீர்கேடு இடம்பெறுவதாக அங்குவாழும் குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட 96 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் 18 வருங்களாக முறையான வடிகான் இன்மையால் சமையலறைக் கழிவுநீர், குழியலறைக் கழிவுநீர் மற்றும் மலசலகூட கழிவுகள் போன்றவை வீட்டுத்திட்டத்தின் பின்புறங்களில் தேங்கி நின்று பாரிய அளவில் நுளம்பு பெருக்கத்தை ஏற்படுத்தி டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன.

மக்கள் செறிந்து வாழும் இந்த வீட்டுத்திட்டத்திலும் அதனை அண்டிய குடியிருப்புகள், பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் போன்ற அரச நிறுவனங்களிலும் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், நோயாளர்கள், அரச அதிகாரிகள் என பலரும் வாழ்வதால் தேங்கி நிற்கும் கழிவு நீரால் மாத்திரமன்றி பருவமழை ஏற்படுகின்ற காலத்தில் தேங்கி நிற்கும் மழை நீராலும் இலகுவில் நோய்த் தொற்று ஏற்பட்டு இறக்கும் அவல நிலையும் காணப்படுகின்றது.

காலத்துக்கு காலம் அரசியல்வாதிகள் பலரும் அதிகாரிகளுடன் வந்து தனக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்தால் இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து தருவதாக வாக்குறுதியளித்து செல்கிறார்கள் ஆனால் நாங்கள் இவ்வாறான நெருக்கடியான வாழ்விலிருந்து மீண்டபாடில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாறுக் ஷிஹான்

# அமைச்சரவை தீர்மானங்கள் சில

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (25) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில




### காட்டுத்தீ ஏற்படுவதைத் தடுத்தல்

மனிதர்களால் காட்டை அண்டிய பகுதிகளில் மேற்கொள்கின்ற தீமூட்டல்களால் குறிப்பாக, வரட்சியான காலநிலை நிலவுகின்ற காலங்களில் காட்டுத்தீ ஏற்படுகின்ற ஆபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. பதுளை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, மொனறாகலை, பொலன்னறுவை, குருநாகல், புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இந்நிலைமை அதிகமாகக் காணப்படுகின்றது.

இவ்வாண்டில் இதுவரைக்கும் 150 காட்டுத்தீக்கள் பதிவாகியுள்ளதுடன், அதனால் 2,600 ஹெக்ரெயார் காடுகள் அழிவடைந்துள்ளன. ஆகவே, தேசிய மட்டத்திலிருந்து கிராம மட்டம் வரைக்கும் அரச பொறிமுறையிலும்இ ஏனைய பங்காளர்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொண்டு காட்டுத்தீ ஏற்படுவதைத் தடுப்பதற்கும், அதனை அணைப்பதற்குமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

நிபுணத்து அறிவுப் பரிமாற்றம், கல்வியாளர்கள் பரிமாற்றம், மாணவர்கள் பரிமாற்றம், ஒன்றிணைந்த ஆய்வு வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட கற்பித்தல் பொறிமுறைகள் மற்றும் ஏனைய குறித்த துறைகள் தொடர்பான ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் மற்றும் ஜோர்ஜியா வெளிவிவகார அமைச்சின் லெவன் மயிக்லட்சே இராஜதந்திர பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### உதிரிப்பாகங்கள் பெறுகைக் கோரல்

முத்துராஜவெலவுக்கு அண்மையிலுள்ள கடலில் பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் நங்கூர மிதவைக்குத் தேவையான கடலில் மிதக்கின்ற 26 இறப்பர் குழாய்கள் மற்றும் அதற்குரிய உதிரிப் பாகங்களின் பெறுகைக்காக சர்வதேச போட்டி விலைமுறிப் பொறிமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக தனியொரு விலைமனு மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த விலைமனுவை மதிப்பீடு செய்த தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரை கிடைத்துள்ளது.

### கப்பல் டீசல் தொகையைக் கொள்வனவு செய்தல்

2023.11.01 ஆம் திகதி தொடக்கம் 2024.02.29 ஆம் திகதி வரைக்கும் தொடர்ந்துவரும் நான்கு (04) மாதகாலத்திற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 04 கப்பல் டீசல் தொகையைக் கொள்வனவு செய்வதற்காக நீண்டகால ஒப்பந்த முறையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்காக 05 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### சட்டத்திற்கான திருத்தம்

சமூகத்திலுள்ள இயலாமையுடன் கூடிய பிள்ளைகளின் நல்லாரோக்கியத்திற்கு முன்னுரிமையளித்து அவர்களுக்கு பரந்தளவிலான பாதுகாப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக சட்டபூர்வமான நிறுவனமாக நிறுவப்பட்டுள்ள அல்லது சமூக சேவை அமைப்பாக பதிவு செய்வதற்கான எந்தவொரு சட்டத்தின் கீழும் பதிவுசெய்யப்பட்டுள்ள, அரசின் சுகாதார சேவைகள்ஃகல்விக் கட்டமைப்புடன் இணைந்து குறித்த பிள்ளைகளுக்கு சுகாதார வசதிகளை வழங்குகின்ற எந்தவொரு தொண்டு நிறுவனத்திற்கும் வரிச்சலுகை கோருவதற்கு இயலுமாகும் வகையில் உண்ணாட்டரசு இறைவரியைத் திருத்தம் செய்வது பொருத்தமானதென முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமையஇ அதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளை உள்ளடக்கி உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு அங்கிகாரம்.

### விசேட கடன் வசதிகளைப் பெறல்

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 02 துணை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீதம் கொள்கை அடிப்படையிலான 02 கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது.

அதன் முதலாவது துணை வேலைத்திட்டத்தின் கீழ் நெருக்கடி முகாமைத்துவ பணிவரைபு மற்றும் நிதிப்பிரிவின் உறுதிப்பாட்டை மேம்படுத்தலுக்காக துரித மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன்இ இரண்டாவது துணை வேலைத்திட்டத்தின் கீழ் மீள்தகவு கொண்ட அனைத்தையும் உள்ளடக்கிய நிதி முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. முதலாவது துணை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 2 சதவீதமான வருடாந்த வட்டி வீதத்தில், 05 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 25 வருடகால மீள்செலுத்தல் தவணைக் காலத்திற்குக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### அரச கடன் முகாமைத்துவ நிறுவனத்தை நிறுவுதல்

2022 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் நிறுவன மீள்கட்டமைப்பாக சுயாதீன அரச கடன் முகாமைத்துவ நிறுவனமொன்றை நிறுவுவதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதுடன், கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மை, சர்வதேச நாணய நிதி விரிவாக்கக் கடன் வசதிகளின் கீழ் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள துறைகளாகக் கண்டறியப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள கடன் முகாமைத்துவ நிறுவனத்தைத் தாபிப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி தொழிநுட்ப ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளன.

குறித்த பங்காளர்களுடன் கலந்துரையாடிய பின்னர்இ கடன் முகாமைத்துவ மறுசீரமைப்புத் திட்டம், கடன் முகாமைத்துவ நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் சட்ட வரையறை போன்றன தற்போது திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கமைய, கடன் முகாமைத்துவ சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கும் யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 2024 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம்

2024 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2023.07.31 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2024 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## வருடாந்த திருவிழா



கேகாலை புனித அன்னை மரியாள் தேவாலயத்தின் 171 ஆவது ஆண்டு வருடாந்த திருவிழா ஞாயிற்றுக்கிழமை (24) மிக சிறப்பாக இடம்பெற்றது.

## விழிப்புணர்வு நாடகம்




போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு வீதி நாடகம் திருகோணமலை – தோப்பூர் சந்தை பகுதியில் செவ்வாய்கிழமை (26) இடம்பெற்றது. போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் இந்த நாடகம் அமைந்திருந்தது.

தீஷான் அஹமட்

## சித்திரக் கண்காட்சி



சாய்ந்தமருது கமு /கமு /அல்–ஹிலால் வித்தியாலய ஏற்பாட்டில் ‘மாணவர்களின் மனதில் தோன்றும் சித்திரங்கள்" எனும் தலைப்பில் பாடசாலை மட்டத்தில் ஆரம்ப பிரிவு, இடைநிலைப் பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியின் கண்காட்சி பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

நூருல் ஹுதா உமர்

## கண்காட்சி



சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய மாணவர்களால் லரையப்பட்ட, ‘மாணவர்களின் மனதில் தோன்றும் சித்திரங்கள்" எனும் தலைப்பில் சித்திர, கைப்பணிக் கண்காட்சி பாடசாலை மட்டத்தில் ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு என இரு பிரிவுகளாகவும் மற்றும் பண்டிகைக் கால உணவுக் கண்காட்சி எனும் தலைப்பில் அமைந்த நான்கு இனத்தைச் சேர்ந்த மக்களின் பெருநாள் உணவுக் கண்காட்சியும் பாடசாலையில் திங்கட்கிழமை (25) நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ. ஜிஹானா ஆலிப், நாடாவை வெட்டி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

எம்.எஸ்.எம்.ஸாகிர்

## உலக தற்கொலை தடுப்பு தின வீதி நாடகம் மற்றும் ஊர்வலம்




உலக தற்கொலை தடுப்பு தினத்தினை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வீதி நாடகம் மற்றும் வீதி ஊர்வலம் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். இரா முரளீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.
இவ் ஊர்வலமானது கல்முனை பிரதான வீதியூடாக சென்று கல்முனை பேரூந்து நிலையத்தில் வீதி நாடகம் நிகழ்த்தப்பட்டு கல்முனை பொலிஸ் வீதி வழியாக வைத்தியசாலையை அடைந்தது. அதனை தொடர்ந்து நன்றியுரை மனநல பிரிவின் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திரு.அழகரெட்ணத்தால் நிகழ்த்தப்பட்டது.

வி.ரி.சகாதேவராஜா

## பிரான்ஸ் தூதுவர் விஜயம்



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை செவ்வாய்க்கிழமை (26) சந்தித்துக் கலந்துரையாடினர்.

நிதர்ஸன் வினோத்

## நான்காவது ஒன்று கூடல்



மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991 /1992 புலன அணியினரின் நான்காவது ஒன்று கூடல் நிகழ்வு மட்டக்களப்பில் திங்கட்கிழமை (25) நடைபெற்றது. புலன அணியின் தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திருமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான 42 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

வி.ரி.சகாதேவராஜா

சென்னை

# எனது வங்கி கணக்குக்கு ரூ.9,000 கோடி எப்படி வந்தது?

### கார் ஓட்டுநர் பொலிஸில் புகார்

தனது வங்கி கணக்குக்கு ரூ.9 ஆயிரம் கோடி எப்படி வந்தது என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என கார் ஓட்டுநர் பொலிஸில் புகார் அளித்துள்ளார்.

சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த கார் ஓட்டுநர் ராஜ்குமார் (28), பழனியில் உள்ள தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் சேமிப்பு கணக்கை வைத்துள்ளார். கடந்த 9-ம் திகதி அவரது சேமிப்பு கணக்கில் ரூ.9 ஆயிரம் கோடி வரவு வைக்கப்பட்டது. பின்னர், அந்த தொகை அவரது கணக்கில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் பரபரப்பு ஏற்படுத்திய நிலையில் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கார் ஓட்டுநர் புகார் ஒன்றை அளித்து உள்ளார். அந்த புகாரில் கூறியிருப்பதாவது: எனது வங்கி சேமிப்பு கணக்கில் ரூ.9,000 கோடி மற்றும் ரூ.11,000 வரவு வைக்கப்பட்டு எடுக்கப்பட்டது தொடர்பாக வங்கி தரப்பில் உரிய விளக்கம் அளிக்கவில்லை.

எனது கணக்கில் போடப்பட்டது யாருடைய பணம் என்பது தெரியாது. ரூ.9,000 கோடி யாருடையது என்று கேட்டதற்கு பதில் அளிக்கவில்லை. தவறுதலாக வரவு வைக்கப்பட்டதாக வங்கி தரப்பில் கூறுகின்றனர். அது ஏற்புடையதாக இல்லை. எனவே, அது குறித்து விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மணிப்பூர்

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்

மணிப்பூரில் மெய்தி இனத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் கொலை செய்யப்பட்டு கிடக்கும் புகைபடங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

மணிப்பூரில் 4 மாதங்களுக்கும் மேலாக மெய்தி-குகி இன மக்களுக்கு இடையே கலவரம் நடந்து வருகிறது. இந்த கலவரத்தில் 170-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கலவரத்தை ஒடுக்குவதற்காக மாநில பொலிஸாருடன் ஆயிரக்கணக்கான மத்திய பாதுகாப்பு படை வீரர்களும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பதற்றம் நிறைந்த பகுதிகளில் தொடர்ந்து ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் மணிப்பூரில் சமூக வலைதளங்களில் வெளியான புகைப்படங்கள் மீண்டும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. புகைபடங்கள் குறித்து பொலிஸார் நடத்திய விசாரணையில், புகைப்படங்களில் பிணமாக கிடந்த இருவரும் மெய்தி இனத்தைச் சேர்ந்த 17,19 வயது மாணவர்கள் எனவும் கடந்த ஜூலை மாதம் இவர்கள் காணாமல் போனவர்கள் என தெரியவந்தது.

ஆயுதம் தாங்கிய கும்பலால் பிணை கைதியாக பிடித்து வைத்திருப்பது போன்றும், பின்னர் அவர்கள் கொலை செய்யப்பட்டு பிணமாக கிடக்கும் புகைபடங்கள் வெளியாகி மணிப்பூரை மீண்டும் அலற வைத்துள்ளது.

கேரள மாநிலம்

# செக்ஸ் தொல்லைக்கு 60 ஆண்டு சிறை

கேரள மாநிலம் பத்தினம்திட்டா மாவட்டம் பன்னிவிழா பகுதியை சேர்ந்தவர் பிரகாஷ்குமார்(வயது43). இவர் கடந்த 2020-ம் ஆண்டு, வாடகைக்கு வீடு பார்த்து தங்கவைத்த ஒரு பெண்ணின் மகனான 15 வயது சிறுவனுக்கு செக்ஸ் தொல்லை கொடுத்திருக்கிறார்.


இது தொடர்பான புகாரின்பேரில் பிரகாஷ்குமாரை அடூர் பொலிஸார் கைது செய்தனர். அந்த வழக்கு விசாரணை அடூர் விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்தநிலையில் அந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

அதில் குற்றம்சாட்டப்பட்ட பிரகாஷ்குமாருக்கு இயற்கைக்கு மாறான உறவு வைத்தல், போக்சோ, மிரட்டல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு மொத்தம் 60 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி சமீர்தான் தீர்ப்பளித்தார். மேலும் அவருக்கு ரூ.3 லட்சத்து 60 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது.

பாரிஸ்

# பகல் இரவு சமமாக இருக்கும் புகைப்படம்

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் (ஈஎஸ்ஏ) தனது எக்ஸ் (ட்விட்டர்) பக்கத்தில் ஒரு செயற்கைக்கோள் புகைப்படத்தை ஞாயிறுக்கிழமை (24) வெளியிட்டது. அதில், சூரியனின் ஒளி பூமியின் மேற்பரப்பில் சரி பாதியாக படுவது தெளிவாக பதிவாகி உள்ளது. 'ஈக்வினாக்ஸ்' என்பது சூரியன் நேரடியாக பூமத்திய ரேகைக்கு மேல் தோன்றுவதால், பகல், இரவு சம அளவு ஏற்படும்.



இந்தப் புகைப்படத்தை பகிர்ந்து ஈஎஸ்ஏ கூறும்போது, "குளிர்காலம் வருகிறது. பகல் இரவு பாதியாக பிரிந்தது. இந்த செயற்கைக்கோள் படம்காலை 9 மணிக்கு எடுக்கப்பட்டது" என்று தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஸ்பேஸ்.காம் இணையதளத்தில், "பூமியின் வடக்கு அரைகோள பகுதியில் இலையுதிர் காலம் தொடங்கியது. தெற்கு அரை கோளத்தில் வசந்த காலம் தொடங்கியது. தற்போது சூரியன் தென் திசையில் பயணிக்கிறது" என்றுதெரிவித்துள்ளது. இந்தப் புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது. பலர் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

பஞ்சாப்

# இம்ரான்கானை அடியாலா சிறைக்கு மாற்ற உத்தரவு

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் (வயது 70) மீது ஊழல் குற்றச்சாட்டு உள்பட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதில் தோஷகானா ஊழல் வழக்கில் கடந்த மாதம் 5ஆம் திகதி அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. எனவே பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அட்டாக் சிறையில் அவர் சிறைதண்டனை அனுபவித்து வருகிறார்.

இதனையடுத்து அவரது உடல்நலம், சமூக மற்றும் அரசியல் நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஏ-வகுப்பு வசதிகள் கொண்ட சிறைக்கு மாற்றும்படி இம்ரான்கான் தரப்பில் வழக்கு தொடுக்கப்பட்டது.


இதுகுறித்த வழக்கு விசாரணை இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்தநிலையில் அவரை ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறைக்கு மாற்றுவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# உலகளவில் 80 கோடி பேருக்கு சிறுநீரக கோளாறு

ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் மாநில மருத்துவக் கல்லூரியில் உலக சிறுநீரக தினம் அனுசரிக்கப்பட்டது. அப்போது கல்லூரியின் சிறுநீரகவியல் பிரிவு தலைவர் டாக்டர் பிஸ்வரஞ்சன் மொகந்தி கூறுகையில், 'உலகளவில் 80 கோடி பேர் சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்டு இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. அதாவது ஒரு இலட்சம் பேரில் 80 பேருக்கு சிறுநீரக பிரச்சினை உள்ளது.

"சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 50 சதவீதம் பேர் மிகவும் தாமதமாகவே சிகிச்சைக்கு வருகின்றனர். இதனால் அவர்களின் நிலைமை மிகவும் மோசமடைகிறது. முன்கூட்டியே கண்காணித்து சிகிச்சை பெற்றால் அதில் இருந்து மீள முடியும்" என்றார்.






முதலாவது சுற்றுப் போட்டியில்

# கொழும்பை வென்ற காரைதீவு

வி.ரி. சகாதேவராஜா

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் கழக தேசிய மட்ட ஆண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் முதலாவது சுற்றுப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியை காரைதீவு அணி வெற்றி தோற்கடித்து வெற்றி வாகை சூடி அடுத்த சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்ட அணி சார்பாக காரைதீவு ராமகிருஷ்ணா இளைஞர் அணியினர் கலந்துகொள்கின்றமை குறிப்பிடதக்கது.



# மபாஸ் மிஷ்ரத் சீமா தேசிய மட்டத்துக்குத் தெரிவு

எம்.எஸ்.எம். நூர்தீன்

காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள காத்தான்குடி பதுறியா வித்தியாலய மாணவி மபாஸ் மிஷ்ரத் சீமா, கிழக்கு மாகாண பாடசாலைக-ளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் 14 வயதுப் பிரிவு குண்டெறிதல் போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மபாஸ் மிஷ்ரத் சீமாவை தாத்தான்குடி பதுறியா வீதியில் வைத்து நேற்று முன்தினம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாடசாலையில் செங்கம்பளம் விரிக்கப்பட்டு வரவேற்ப ளிக்கப்பட்டது.

இதன்போது மபாஸ் மிஷ்ரத் சீமாவுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவம் வழங்கப்பட்டதுடன், இம்மாணவியை பயிற்றுவித்த ஏ.பி. சஸ்னா ஆசிரியை, ஏ.எஸ்.எம. ரிப்னாஸ் ஆசிரியர் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.



இக்னேஷியஸ் தொடர்:

# அடுத்த சுற்றில் ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக் கழகம்

அஸ்ஹர் இப்றாஹிம்

இக்னேஷியஸ் கால்பந்தாட்டத் தொடரில் அடுத்த சுற்றுக்கு ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக் கழகம் தெரிவாகியுள்ளது.

அணிக்கு 7 பேர் கொண்ட இத்தொடரின் அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் மட்டக்களப்பு விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட வளர்பிறை விளையாட்டுக் கழகம் 1-1 என்ற கோல் கணக்கில் வழமையான நேரத்தில் போட்டியை சமநிலையில் முடித்திருந்தது.

இந்நிலையில், வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக மத்தியஸ்தர்களால் தண்டனை உதை வழங்கப்பட 4-3 என்ற ரீதியில் வளர்பிறை விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளனர்.



கம்பஹா லைசியம் சர்வதேசப் பாடசாலையின்

# நீச்சல் சம்பியன்ஷிப்பில் சிக்னஸ் இல்லம் சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

கம்பஹா லைசியம் சர்வதேசப் பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் சிக்னஸ் இல்லம் 965 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது.

உரஸ இல்லம் 912 புள்ளிகளைப் பெற்று இரண்டமிடத்தையும், செட்ரஸ் இல்லம் 840 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், அகியூலா இல்லம் 662 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

எனசல்கொல்ல மத்திய கல்லூரியின்

# பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் தொடர்

தெல்தோட்டை எனசல் கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பழைய மாணவர்களை கல்லூரியுடன் இணைக்கவும் அவர்களின் மூலம் பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் எதிர்வரும் வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை தெல்தோட்டை மெதகெகில, ஷேரன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கிரிக்கெட் தொடரொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது.

எனசல்கொல்ல பிறீமியர் லீக் என்ற பெயரில் நடைபெறும் இத்தொடரின் ஆரம்ப நிகழ்வு எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஒன்றிணைவோம் பலம்பெறுவோம் எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெறவுள்ள இத்தொடரில் கல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுக்கின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 27 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.